ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

விஷயங்கள் பலவிருக்கும்பொழுது அவைகளாலுண்டாகின்ற சுகத்தை விட விஷயமொன்றுகூட இல்லாத சமயத்தில் இயற்கையாயமைந்த சுகமே சிறந்ததென்பது ஒவ்வொருவனும் நாடோறும் ஸுஷுப்தி அவஸ்தையில் அனுபவிக்கக் கூடியதே. அத்தகைய உயர்ந்த சுகம் பெறுவதற்கான ஆசையிருப்பினும் அதனைப் பெறுவதற்குறிய சாதனங்களைப் பெரும்பாலும் பிராணிகள் அனுஷ்டிக்கவில்லை. ஆயினும் விஷயசுகத்தை அடைய பிரயத்தனம் செய்யாதவர் யாருமில்லை. கிராமாந்தரங்களில் வஸித்துக்கொண்டு அங்குள்ள விஷயசுகத்தை அனுபவிப்பதைவிட நகரங்களிலிருந்து அதையனுபவிப்பது சிறந்ததாகவே இருக்குமென்று கருத்துக்கொண்டுதான் கிராமாந்தரவாசிகளும் நகரவாசத்திற்கு ஆசைப்படுகிறார்கள். அதற்கு வேண்டிய வேலைகளையும் செய்கிறார்கள். அதிலும் ஸாதாரண நகரங்களைவிட மஹாராஜா வசிக்கும் ராஜதானியை அடையவிரும்புகிறார்கள். இவ்வாறு இவ்வுலகில் ஒன்றைவிட ஒன்று உயர்ந்ததான ஸ்தானங்கள் இருப்பதுபோலவே லோகாந்தரங்களிலும் அனேக ஸ்தானங்களிருப்பதாகவும், இதைவிட அவ்விடங்களில்எவ்வளவோமடங்குஅதிககாலம் வசிக்கலாமென்றும், அதிக சுகம் பெறலாமென்றும், கருதியே அதற்காகவென்றே யக்ஞாதிகளான பற்பல ஸாதனங்கள் விதிக்கப்பட்டிருப்பதாகவும் சாஸ்திர திருஷ்டியைக்கொண்டு நம்முன்னோர்கள் கண்டறிந்தார்கள். அதனாற்றான் லோகாந்தரம் சென்றவர்களின் திருப்திக்காகவும், திருப்தி அடைந்தவர்களது பிரஸாதத்தால் ஸந்தான ஸம்பத்துக்களை அடைவதற்காகவும் சிராத்தமென்றதோர் கர்மம் சாஸ்திரத்தில் விசேஷமாக விதிக்கப்பட்டிருக்கின்றனவென்று அதனைச் சிரத்தையுடன் அனுஷ்டித்து வந்தார்கள். அதற்காகவென்றே ஸத்புத்திரன் வேண்டுமென்றும், அவன் தான் பரலோகத்திற்கு உதவுவானென்றும், முறைப்படி உசிதகாலத்தில் விவாஹம் செய்யப்பட்ட பாரியாளிடம் ஜனித்தவனே ஸத்புத்திரனாவானென்றும், புத்திரப்ரதிபந்தமிருந்து அதனால் புத்திரலாபம் நேராவிடில் கர்மவிபாகத்திலும் சோதிடநூல்களிலும் கூறப்பட்ட அதன் பரிஹாரத்தைச் செய்துகொண்டாவது அந்த பாக்யத்தைப் பெறவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். அவைகளெல்லாவற்றையும் தற்காலத்தியவர்கள் அடியோடு மாற்றிவிடப் பார்க்கிறார்கள். இவர்களது முயற்சியின் பலனாக பால்யவிவாஹத்தடை சட்டமாகிவிட்டது. கர்ப்பத்தடை உபாயம் உபன்யசிக்கப்பட்டு வருகிறது. விதவாவிவாஹக் கக்ஷிக்காரர்களால் பர்த்தாவுக்கு ஸ்திரீகள் செய்யும் சிராத்தம் தடுக்கப்படுகிறது. விவாஹரத்து மசோதாவும் சிராத்தத்தடை மசோதாவும் கொண்டுவரப்பட்டால் உடனே அவைகளும் சட்டமாகிவிடப்போகின்றனவென்று அவர்கள் களிக்கின்றனர். வைதிகர்கள் இவ்வளவுக்கும் அஞ்சாமல் ஈசனது கட்டளைப்படி நடக்கத்துணிந்திருக்கிறார்கள். சுபம்!

பத்திராதிபர்,

## ஆர்யதர்மம்.

சுக்ல-ஸூ கார்த்திகை-மீ ௧௩உ

# சிராத்தம்.

பரலோகம் சென்றவர்களுக்கு அவர்களைச் சேர்ந்தவர்கள் சிராத்தாதிகளால் உபகரிக்கவேண்டுமென்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டபடி நாளதுவரையிலும் ஆஸ்திகர்களாலனுஷ்டிக்கப் பட்டுவருகிறது அந்த உபகாரமே சிராத்தமெனப்படுகின்றது. அந்த சிராத்தத்தில் கர்த்தாவுக்கு அனேக நியமங்கள் கூறப்படுகின்றன. புத்திரன் முதலிய கர்த்திருக்கிரமத்தில் படிக்கப்பட்டவர்கள்தான் சிராத்தத்தைச் செய்யலாம். கண்டவர்களுக்கெல்லாம் கண்டவர்கள் சிராத்தம் செய்யக்கூடாது. செய்தால் பயனில்லை. காலக்கொடுமையால் மாதாபிதாக்களுக்குச் சிராத்தம் செய்யாதவர்கள்கூட காலக்கொடுமையால் யாராருக்கெல்லாமோ சிராத்தம் கொண்டாடுவதாகக்கேழ்விப்படுகிறது. சிராத்தகர்த்தா ஸத்புத்திரனாக இருக்கவேண்டும். இதற்காகத்தான் விவாஹ ஸம்ஸ்காரத்தால் உபநயனமுக்கியகாலமாகிய எட்டாவது வயதிலாவது கௌணகாலமாகிய ஒன்பது பத்து வயதுகளிலாவது பாணிக்கிரஹணம் செய்யப்பட்ட பாரியையினிடத்தில் கர்ப்பாதானஸம்ஸ்காரப்படி உற்பத்திசெய்யப்பட்டு, பும்ஸவனஸீமந்தாதிகளால் வளர்க்கப்பட்டு, புத்திரன் உண்டுபண்ணப்படவேண்டும் என்று சாஸ்திரம் நியமனம் செய்கிறது. இந்தப் புத்திரன் பரலோகத்திற்குமாத்திரம் உதவிபுரிவானென்பதில்லை. இஹத்திலும் பிதா செய்யவேண்டியதான பாக்கியுள்ள காரியங்களைச்செய்து பூர்த்திபண்ணுவதாலுமுபகரிக்கிறான். அதனாற்றான் பிதாவின் சரீரமும் புத்திரனது சரீரமும் ஒன்றெனக் கூறப்படுகின்றது. இந்த ஸம்ஸ்காரங்களாற்றான் அவ்விதமாகுமேயன்றி வேறு எவ்வகையாலும் ஆகமுடியாது. ஒரு க்ஷேத்திரத்தில் விதைபோட்டுப் பலனையெடுக்கவேண்டுமானால் அந்த க்ஷேத்திரம் தன் ஸொந்தமாயிருக்கவேண்டும். அப்படியிருந்தாற்றான் அதில் கோடைமா

மத்தும் எருத்தழை முதலிய உரம்போடுதலும், சரியானபடி செய்யப்படும். ஒருவருஷத்திற்கோ, இரண்டுவருஷத்திற்கோ குத்தகைக்காவது வாரத்திற்காவது வாங்கப்பட்ட க்ஷேத்திரத்தில் நீடித்த மராமத்தும், நீடித்தஉரமும் செய்யப்படமாட்டாதென்பது பிரஸித்தமே. அதிலும் பருவத்தில் பயிரிட்டாற்றான் பலனெடுக்கலாம். அப்படியெடுக்கப்பட்ட பலன் அந்த ஸமயத்திலும் காலாந்தரத்திலும் உதவும். அதுபோலவே ஸ்திரீயென்பவளை க்ஷேத்திரமென்று நம் சாஸ்திரம் கூறுகின்றது. அவள் பீஜாவாபத்திற்குரிய காலத்திற்கு முந்தியே ஸொந்தமாய்விடவேணும். அப்படியானாற்றான் ஸத்ஸந்தானம் பெறுவதற்குள்ள மராமத்து உரம் போன்ற அனுராகம் முதலிய குணங்களேற்படுமாம். இது காம சாஸ்திரத்திலும் வைத்தியசாஸ்திரத்திலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. அத்தகைய குணம் நிறைந்த பாரியை கிரஹிக்கப்பட்ட நாள்முதல் அச்சரீரமுடிவுவரை ஸொந்தமாகவே இருக்கவேண்டும். இடையில் குத்தகைக்கு பூமி விடப்படுவதுபோல் சிறிது காலம் விடப்படவாவது, பூமியை விற்றுவிடுவதுபோல் ரத்து செய்துவிடவாவது கூடாது. அவ்வாறு ஸொந்தமான பத்னியிடம் உசிதகாலத்தில் உண்டாக்கப்பட்ட புத்திரன்தான் ஸத்புத்திரனுவான். அவன்தான் இஹத்திற்குமுதவுவான், பரத்திற்குமுதவுவான். அவன் செய்த சிராத்தத்திரவியந்தான் லோகாந்தரத்தில் கிடைக்கும். இந்தப் பிரயோஜனத்தைத்தான் முக்கியமாக உத்தேசித்து நம் முன்னோர்கள் விவாஹாதிகாலங்களை பால்யத்திலேயே ஏற்படுத்தியிருக்கிறார்கள். பசு, பக்ஷி, முதலியவைகளைப்போல இஹத்திலும் பரத்திலும் உதவிபுரியாதவர்களல்ல மானிடப்பிறவியெடுத்தவர்கள். ஆகையால் சிராத்தாதிகளால் உபகரிக்கும் ஸத்புத்திரனைப் பெறவேண்டி பால்யவிவாஹத்தையே செய்து யாவரும் அதன் பயனைப் பெறுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

## பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

# சோழமன்னர்களின் சரித்திரம்.

(௬௫௬-வது பக்கத்தொடர்ச்சி)

## 29 அத்தியாயம்

ஸூதர்:— மங்களகுணங்கள் நிறைந்தவனும், மிக்க தர்மசிந்தை பொருந்தியவனும், மேருவை வில்லாகவுடைய பகவானிடத்து

564



மிக்க பக்தியுள்ளவனுமான கல்யாணசோழன், கல்யாணி என்னும் தன் பேரமைந்த, பாண்டிய மன்னனின் மகளை மணந்துகொண்டு இச்சோழராஜ்யத்தைத் தன் தகப்பனைவிட நூறு பங்கு மேலாகத் தர்மத்துடன் ஆண்டுவந்தான். அவன் தாளவனம் சென்று சங்காருக்குக் கோபுரம், மண்டபம், பிரகாரம், இவைகளைக் கட்டினான். வேறு பல சிவாலயங்களையும் நிர்மாணம் செய்து சிவகைங்கர்யத்தையே மேலாகக்கொண்டான். நளபுரத்திலுள்ள ஆலயம் ஸப்ததியாகேசர் ஆலயங்களிவைகளில் கோபுரங்களையும் மண்டபங்களையும் செய்து முடித்தான். மணியென்னும் புதிதாக ஓர் நதியைக் காவேரியின்றும்வெட்டிவிட்டு அதன் கரைகளிற் சில சிவாலயங்களையும் கட்டினான்.

பின்னோர் சமயம் சேரன் சோழன் பாண்டியன் விக்கிரமன் என்னும் இந்நான்கு வம்சத்து மன்னர்களும் திருவாதிரை மஹோத்ஸவத்தைக் காணவிரும்பிச் சிதம்பரம் சென்று ஸபாபதியைக் கண்டு களிப்புற்றனர். பிறகு அவர்கள் அங்கேயே “நாம் நால்வரும் இங்கு நான்கு திசைகளிலும் சமமாகக் கோபுரங்களை ஓர் வருஷத்துக்குள் கட்டி முடிக்கவேண்டும். நம்முள் அதனை யார் முதலில் முடிக்கின்றோமோ அவரே மேலானவரெனக் கருதப்படவேண்டும்” என்று பிரதிக்ஞை செய்துகொண்டனர்.

அவ்வாறே அன்னால்வரும் தங்கள் தங்களமைச்சர்களைக்கூப்டாணையிட்டு, தக்க சிற்பிகளைத் தனித்தனியே அழைத்துவந்து வஸ்திராபரணங்களால் வெகுமதித்து, சந்தோஷத்துடன் நான் முன்னே நான்முன்னேயென்று கூறிக்கொண்டு, இராப்பகலாய் சோம்பலின்றிக்கோபுரங்களைக் கட்டத்தலைப்பட்டனர்.

கிழக்கு திசையிற் சேரனும் மேற்கில் பாண்டியனும் வடக்கில்விக்கிரமனும் தென்திசையில் கல்லியாணச் சோழனும் கோபுரம்கட்டுவதிடையூரின்றி நிறைவேறுவதன் பொருட்டு முக்குருணியரிசிக் கணபதியைப் பிரதிஷ்டை செய்து கோபுரங்களைக் கட்டத்துடங்கினர்.

प्राच्यांचेर: प्रतीच्यांतु पाण्ड्यो विक्रमउत्तरे ।
कल्याणचोळोयाम्येतु चक्रे संस्थाप्य विघ्नपम् ।
द्रोणत्रयाख्यं संपूज्य आदौ गोपुरसिद्धये ॥

பிறகு சோழமன்னன் ஸபாபதியையும் சிவகாம சுந்திரியையும் வணங்கி சிவகங்கையின் கரையில் மனையாளுடன் துயிலுற்ருன். அப்பொழுது ஸபாபதி கனவிற் தோன்றியுரைக்கலாஞர்.

ஸபாபதி:— ஏ சோழனே! சேரன் பாண்டியன் விக்கிரமன் இவர்களை விட நீயே என்னிடம் மிகுந்த பக்தியுடையவன். சிவகங்கைக் கரையின் கிழக்கே ஓர் ஆயிரக்கால் மண்டபத்தையும் கட்டுவாயாக. தென் கோபுரமே முதலில் முடிவுபெறும். சிவகைங்கர்யங்கள் செய்ததன் பயஞக உன் முன்னோர்கள் சந்திர ஸூர்யர்கள் உள்ளவரையில் என் கணங்களாக வசித்து வருவார்கள். நீ இங்கு கைங்கர்யம் செய். உனக்குக்கைலாஸவாசம் அளிக்கிறேன். உன் வம்சத்தோருக்கு உதவிபுரியுமாறு விசுவகர்மாவை உத்திரவிட்டிருக்கிறேன். முன்பு கரிகாலனென்னும் உன் பாட்டன் மிக்கப் பெரிய பிருஹதீசாலயத்தைக் கட்டுகையிலுதவிபுரிந்த சிற்பியின் வம்சத்திலுதித்தவர்களை அழைத்து வந்து இக்கோபுரத்தைக் கட்டுவாயாக.

பிறகு சங்கரன் மறையவே கல்யாணசோழன் என்னும் அரசன் காலையிலெழுந்து சந்தோஷத்துடன் ஸோமவர்மாவின் வம்சத்திலுதித்த ஸௌரவர்மா என்னும் சிற்பியை வஸ்திராலங்காரங்களாலும் உபசரித்து அவனைக்கொண்டு ஒரு வருஷத்திற்குள் மண்டபத்தையும் கோபுரத்தையும் அழகு பெறச் செய்துமுடித்தான். பிரதிக்ஞையும் நிறைவேற்றப்பட்டது. அதன் பிறகே மற்ற மன்னர்களின் கோபுரங்கள் முடிந்தன. "சோழவேந்தனே எல்லோரிலும் மேல்" என்ற சொல் உதித்தது. சிவனை வணங்கிய அம்மன்னர்கள் எல்லோரும் தன்னுேடு சென்றனர்.

சோழவரசன் 77-வயதுவரையில் சோழமண்டலத்தை ஆண்டு தன் மகன் பத்திரசோழனை நற்குணம் வாய்ந்த மனையாளுடன் பட்டாபிஷிக்தனுகச் செய்து, ஸபாபதியினருளால் சிவஸாரூப்யம் பெற்று, கைலையில் வசிக்கலானன்.

மங்களகுணங்கள் பொருந்திய பத்ரசோழன் ஸுபத்ரை என்னும் மனையாளுடன் குடிகள் தன்னிடம் அன்புபாராட்டும் வண்ணம் உலகாண்டான். சிவபக்தர்களிற் சிறந்த அம்மன்னன் ஸ்வாயம்புவம் தெய்வம் ஆர்ஷம் எனப்படும் மூவகைச் சிவாலயங்களையுஞ் ஜீர்ணோத்தாரணஞ்செய்தான். முக்கியமாக மூன்று ஸ்தலங்களிலும் மற்றும் திருக்கோடிக்காவு, மங்களாம்பிகம், சாயா

வனம், வேதாரண்யம், திருவீழிமழலை, காச்யபாரண்யம், வைத்தீச்வரன்கோயில் இவ்விடங்களில் ஆலயங்களைக் கட்டினான்.

நாநாதிசைகளிலும் வேறு பல சிவாலயங்களையும் நிர்மாணஞ் செய்து மத்தபுரமென்னும் ஊரிற்சென்று பிள்ளையைக்குறித்துத் தவஞ்செய்து சிவனை சந்தோஷமுறச்செய்தான். அங்கோரிரவு சங்கரன் கனவிற்றோன்றி, 'சிவகணங்களாகிய நீங்கள் என்னால் அரசனாகப் பிறக்கும்படி செய்யப்பட்டீர்கள். என்னாணைப்படி என்னுடைய ஆலயங்களையெல்லாம் கட்டினீர்கள். ஏ பத்திரனே! உன் காரியங்கள் நிறைவேற்றப்பட்டன. அரசே! மனையாளுடன் செல்வாயாக'வெனக் கூறியவைக்கேட்டுக் கனவிலேயே பத்திரனென்னுஞ் சோழனும் 'பிள்ளையில்லாதோருக்கு நல்லவுலகமில்லையே! என்செய்வேன்!' என வினவலானான்.

அதுகேட்ட சங்கரர் உரைக்கலுற்றார். ஈசன்:—

तमाह कर्मठानां सापद्धतिर्नास्तिभक्तके ।

இவ்வழி யோககர்மமார்க்கத்தைப்பற்றி கர்மாவையே செய்வோர்களுக்கல்லாமல் (மோக்ஷமார்க்கத்தைக்கிட்டிய) பக்தர்களுக்கேற்பட்டதல்ல. நீ என் கைங்கர்யத்தில் விருப்புடையவன். எவ்வளவு நாட்கள் உங்கள் கைங்கர்யங்களுலகில் நிலைபெறுகிறதோ, அவ்வளவு நாட்கள் கைலாஸத்திற் சிவகணங்களாக வசிப்பீர்கள். சிவாலயங்களிற் கட்டப்பட்டுள்ள கற்களில் எவ்வளவு அணுக்களிருக்கின்றனவோ, அவ்வளவு வருஷங்கள் உங்களுக்கு கைலாஸவாஸம் நிச்சயம் ஏற்படும். எவ்வளவு நாட்கள் சோழனென்னும் பிரசித்தி உலகில் நிலைபெற்றிருக்குமோ, அவ்வளவு நாட்கள் கைலாஸத்தில் கணத்தலைவர்களாக வாழ்வீர்கள். மிக்க புண்ணியசாலிகளாகிய உங்களுக்கு இனிக் கலியிற் சந்ததி வேண்டாம்.

इतः परं वैयवनाः आन्ध्राश्शूद्राश्चद्राविडाः ।
भविष्यन्ति महीपृष्ठे नृपाश्चोलेच पाण्ड्यके ॥

இனிமேல் துலுக்கர்களும் தெலுங்கர்களும் சூத்திரர்களும் திராவிடர்களும் இப்புவியில் சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும் அரசனாகப் போகின்றனர். இப்பொழுதும் நான்கு வர்ணங்களுள் என் பக்தர்கள் இருக்கின்றனர். காவேரியினுடையவும் தாம்பிர

பர்ணியினுடையவும் கரைகளின்றும் என் பக்தர்கள் வசிக்குமிடமாக விளங்குகின்றன. இக்கலியிலும் சோழநாட்டையும், பாண்டியநாட்டையும் அரசர்கள் தர்மப்படி ஆள்வர், என்னுடைய ஆலயங்களையும் பாதுகாப்பார். நீ இனிக் கவலையைவிட்டொழிப்பாயாக.

पुण्यस्थले निवसतां पुण्यमेव भवेन्मनः ।

புண்யக்ஷேத்திரங்களில் வசிக்கின்றவர்களுடைய மனமும் மிக்கப் பரிசுத்தமாகவேயாகும்.

இவ்வாறு கனவிற் சிவனுணையைக்கேட்டு அதன்படியே ஏராளமாகப் பணத்தைச் செலவிட்டு எல்லா ஆயங்களிலும் கைங்கர்யம் செய்தான். தக்க அந்தணர்களிடம் ஷோடசமகாதானங்களையும் ஆயிரம் கோதானங்களையும் செய்தான். வேலைக்காரர்களுக்கு வேண்டிய பொருள்கள் அளித்தான். ஸகல போகங்களையும் தாத்தக்கதும் சிவனுல் அனுப்பப்பட்டதுமான விமானத்தில் அச்சோழமன்னன் ஸுபத்ரை என்னும் மனையாளுடனே ஏறினன். அப்பொழுது வானத்தில் நின்றும் புஷ்பவர்ஷங்கள் வர்ஷித்தன. தேவ வாத்தியங்கள் முழங்கின. அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் செய்தனர். இவ்வாறு 70-வது வயது முடிவில் சிவபதம் அடைந்தான்.

भद्रान्ताश्चोलभूपालाः सर्वे शिवगणाभुवम् ।
समासाद्य नृपश्रेष्ठाः भक्त्या निस्तीर्यते यशः ॥
पुनश्च शिवलोकाय ययुस्सर्वे नृपोत्तमाः ।

சிவகணங்களெல்லோரும் பத்திரன் வரையிலுள்ள சோழமன்னர்களாக இப்புவியில் அவதரித்து சிறந்த அரசர்களென்னும் கீர்த்தியை நிலைபெறச் செய்து, சிறந்தவேந்தர்களாகிய அவர்களெல்லோரும் தாங்கள் சிவனிடத்தில் செலுத்திய பக்தியின் பயனுகத்திரும்பவும் சிவலோகத்தையே அடைந்தனர்.

சிவபக்தர்களிற் சிறந்தவர்களும் பஸ்மருத்திராக்ஷமணிந்தவர்களும், நல்ல கீர்த்தி வாய்ந்தவர்களுமான சோழேந்திரர்கள் பல சிவாலயங்களைப் புதுப்பித்து, மனிதர்களாக நடித்து, அறம் வழுவாது உலகாண்டு கலியின் ஆயிரம் வருஷங்களின் முடிவிற் கைலாசம் சென்றனர். ஆதலால் அவர்கள் சரிதத்தைக் கேட்ப

வர்கள் எல்லாப் பாபங்களும் நீங்கிப் பரிசுத்தியடைவர். இதனைக் கேட்போரும், கேழ்க்கச் செய்வோரும், எல்லாவிருப்பங்களையும் பெறுவார்கள்.

ஸூதர்:— ஸாக்ஷாச்சங்கரர் குலோத்துங்கனென்னும் மஹீபதிக்குக் கனவில் திவ்யக்கிரீடமொன்றையும் பட்டத்தையும் அளித்தார். தேவசோழன் காவேரியின் நடுவே ஓர் அணையை கட்டினன். காவேரிநதிக்கு நூறுமுகங்களையுண்டுபண்ணினன். இருகரைகளையும் உறுதிபெறச் செய்தான். காவேரியின் கரைகண்டவன் என்னும் பிரசித்தியையும் அடைந்தான். பிறகு பல சிவாலயங்களையும் அர்ச்சித்து முடிவிற் சிவபதம் பெற்றான். சிவலிங்கச்சோழனிச் சோழநாட்டிற் பல லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்தான். அம்மன்னன் அறநெறி கடந்த தன் தனயனையும் கூடச்சிறிதும் ஆலோசியாது இரதச் சக்கிரத்திற்கு இறையாக்கினன். பிறகு வீரசோழன் பல சிவாலயங்களைக் கட்டி, காவேரி நதியில் ஓர் தலைப்பையும் உண்டு பண்ணினன். கரிகாலன் பிருஹதீசரின் ஆலயத்தைக் கட்டுவித்தான். பீமசோழன் தஞ்சாநகரில் கோங்கணேசர் முதலியோரின் ஆலயங்களை நிர்மாணஞ் செய்தான். அவன்மகன் இராஜேந்திரசோழன் சங்கரநாராயணரின் கோயிலைக்கட்டி, பாண்டியன் சேரன் முதலானவர்களை ஜயித்து, அவர்களுக்கு எல்லாம் தலைவனான சிவபக்தனாக விளங்கிவந்தான். ஜயசோழன் சிவனுக்கு ஓர் உயாமான ஆலயஞ்செய்தான், வீரமார்த்தாண்டன் சத்துருக்களை வென்று சிவாலயங்களைக் கட்டினன். கனகனென்னுஞ்சோழன் காவேரியின் பிரவாஹத்தைத் தடுத்தான். ஸுந்தரசோழன் திருவிடமருதூரில் சங்கரனருளால் பிரும்மஹத்தியினின்றும் விடுபட்டான். காலகாலன் திருப்பனந்தாளிலுள்ள லிங்கத்தை நேர்மைப்படுத்தினன். கல்யாணசோழன் சிதம்பரத்தில் கோபுரங்கட்டினன். மற்றும் பல சிவாலயங்களையும் நிர்மாணஞ்செய்தான். பத்திரசோழன் சிவாலயங்களையர்ச்சித்துச் சிவபதம் பெற்றான்.

இப்பதினறு சோழமன்னர்களும் இக்கலியில் சிவகைங்கர்யங்கள் செய்தமையால் கைலாஸத்திற் சிவகணமாகவமர்ந்தனர். இஃதோர் நல்ல சரித்திரம். சோழேந்திரர்களாற் சிவகைங்கர்யங்கள் செய்யப்பட்டன. இஃது எல்லாத்திரைகளிலும் போற்

றப்படுகிறது. இவர்களின் திவ்யமான கீர்த்தியை ஜனங்கள் கேழ்கட்டும் புவியிலிவைகளைப் பார்க்கவும் பார்க்கட்டும்.

சங்கரபக்தர்களிற் சிறந்த இம்மன்னர்கள் ஸ்ரீகண்டேசர், ரத்தினகிரீசர் இவர்களாலயங்களைக் கருங்கற்களாலேயே நிர்மாணஞ்செய்தார்கள். காவேரியின் கரையில்ஸ்ரீரங்கநாதர், ஐப்யேசர், வைத்யேசர், தஞ்சேசர், மலைபோன்ற பிருஹதீசர், கும்பேசர், நாகேசர், சோமேசர், குஹரேசர், விருத்தபுரீசர், அருணாசலேசர், சாயாவனேசர், பீமேசர் முதலியவர்களின் கோயில்களையும், திருவானைக்காவு, திருவெண்காடு, திருப்பூந்துருத்தி, வேதாரண்யம், மாயூரம், திருக்கடையூர், விதிபுரம், சீயாழி, திருவீழிமழலை, ஸ்ரீவாஞ்சியம், திருவாலங்காடு, திருவாடுதுரை, திருபுவனம், கங்கைகோண்டபுரம், திருவடமருதூர், இராமேச்வரம், ராஜகம் முதலியவிடங்களிலுள்ள ஆலயங்களையும், வல்மீகேசருக்குக் கோபுரவாயில்களையும், வியாக்கிரபுரேசருக்கு (சிதம்பரம்) சபை, கோபுரம் இவ்விரண்டையும் பரிசுத்த மனதுடன் செய்துமுடித்தனர்

ஸூதர்:—

एवं चोळमहीभृतां श्रुतिपुटैः स्फीतं यशश्शृण्वतां
भक्तिस्स्याद्गिरिशे भवत्यनुदिनं पापौघनाशस्तथा ।
विद्यापुत्रकलत्रमित्र सुगृहक्षेत्रार्थमप्युत्कटं
भूयादेव महेश्वरस्य कृपया पश्चाद्गणत्वं लभेत् ॥

இவ்வாறு சோழமன்னர்களின் கதையைக் கேட்போர்களுக்கு பரமசிவனிடத்திற் பக்திபறிகரிக்கும். தினமும் பாபஸமூகங்கள் அழியும். கல்வி, மகன், மனையாள், நண்பர், நல்ல வீடு, பூமிகள், பொருள்கள் ஏராளமாகவும் சங்கரனருளால் ஏற்படும். பிறகு சிவகணங்களாயாகிவிடுவார்கள்,

## 30 அத்தியாயம்.

ஸூதர்:— ஜம்பூத்வீபத்தின் மஹிமை புராணமெனப்படுகிறது. அதனைக்கூறுகிறேன். ஏ நைமிசாரண்யமுனிகளே! கேளுங்கள்.

முனிவர்கள்:— ஏ மஹரிஷிசிரேஷ்டராகிய ஸூதரே! மிக்க ஆனந்தத்தைக் கொடுக்கவல்லவைகளும், வேதத்திற்கொப்பானவைகளுமான புராணங்களும் உம்மாற் கூறப்பட்டது. இச்

செம்பூத்தீவில் காவேரியாற்றின் தெற்கேயுள்ள சிவாலயங்களை முக்கியமாக அறியவிரும்புகிறோம். ஸ்வயம்புவஸ்தானங்களாகவும் பிரதிஷ்டாஸ்தானங்களாகவும் எவ்வளவு க்ஷேத்திரங்களிருக்கின்றனவோ அவைகளெல்லாவற்றையுங் கூறுவீராக.

ஸூதர்:— முன்னொருகால் வெள்ளிமலையுச்சியிற் சுகமாய் வீற்றிருந்த சங்கரனை மலைமகள் வினவலானாள்.

பார்வதீ:— சிவமே! சம்புவே! விருபாக்ஷரே! ஞானரூபியே! நன்மை பயப்பவரே! பூவுலகிலுள்ள உம்முடையவும், விஷ்ணுவினுடையவும் க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் உம்பால் கூறப்பட்டன. காவேரியைப்பற்றிப் பேசுகையில் காவேரியின் தென்கரையிலுள்ள தியாகராஜர் முதலியோரின் ஆலயங்கள் வர்ணிக்கப்பட்டன. அங்கு எவ்வளவு முக்தியையளிக்கவல்ல ஆலயங்களும் தீர்த்தங்களும் நதிகளும் ரதங்களும் இருக்கின்றனவோ, அவைகளெல்லாவற்றையுங் கூறுவீராக.

ஈசன்:— காவேரி, ஸேது இவ்விரண்டிற்கும் இடையில் என்னுடைய ஆலயங்கள் இருபத்துமூன்றாயிரமும், விஷ்ணுவின் ஆலயங்கள் பதினாயிரமும், முருகனாலயங்கள் ஆறாயிரமும், விநாயகாலயங்கள் ஐயாயிரமும், காளியின் ஆலயங்கள் ஆயிரமும், தாண்டவஸ்தலங்கள் நூறும், துர்க்காலயங்கள் மூவாயிரமும், சாஸ்தாவின் ஆலயங்கள் பதினோராயிரமும், பூதாலயம் நூறும் முன்பு இருந்தன. இவைகளெல்லாம் மிக்கப் பழமையானவைகள். முன்பு மஹரிஷிகளால் என்னாணைப்படி பிரதிஷ்டை செய்து அர்ச்சிக்கப்பட்டன.

मम क्षेत्रेषु हरिणा त्वया सहमहेश्वरि ।
वासं करोमि तस्यापि क्षेत्रेषुच हरेरहम् ॥
नविमुञ्चामि तत्क्षेत्रं कल्पान्तेपि कदाचन ।

என்னுடைய க்ஷேத்திரங்களிலும் விஷ்ணுவினுடைய க்ஷேத்திரங்களிலும் நான் எப்பொழுதும் உன்னுடனும் விஷ்ணுவுடனும் வசித்துவருகிறேன். கலிகாலத்தின் முடிவிலுங்கூட ஒருபொழுதும் நான் அதனைவிட்டு நீங்குவதில்லை.

† முக்திக்ஷேத்திரங்களைக் கூறுகிறேன் கேள்.

† பெரும்பாலும் வடமொழியிற் கூறியுள்ள ஸ்தலங்களின் பெயர்களை அவ்வாறே தென்மொழியெழுத்தில் வரைந்துள்ளேன். கூடியசீக்கிரம் "சிவக்ஷேத்திர ஆராய்ச்சி" என்றதோர் வியாசத்தில் இவைகளைத் தெளிவுபெறக் கூறுகிறேன்.

ஜம்புகேச்வரம். (திருவானைக்காவு) வாஞ்சேச்வரம் (ஸ்ரீவாஞ்சியம்) மாயூரம். கும்பேச்வரம். (கும்பகோணம்) வாமனேச்வரம். (திருமாணிக்குழி) பஞ்சநதம் (திருவையார்) அகஸ்தியேச்வரம். (கார்க்கோடிமாமலை) மார்க்கண்டேயேச்வரம், (திருக்கடையூர்) புத்ரக்கினேச்வரம். அலர்கேச்வரம். மத்தியார்ச்சுனம். (திருவடமருதூர்) தர்மஸம்ஸ்தாபனேச்வரம். சந்திரேச்வரம். தியாகராஜம். (திருவாரூர்) தஞ்சேசம். (வடவாற்றங்கரை) பிருஹதீசம். (தஞ்சாவூர்) பிரஹ்லாதேசம். ஆத்மநாதம். கன்யாபுரேசம். பதரீசம். தாஸீச்வரம். கர்ப்பரக்ஷாபுரேச்வரம். காச்யாரண்யேசம். காலகூடவிஷாதனம். திருவிம்மேசம். சித்திரபுரேசம். யோகிச்வரம். பிரும்மசாரிச்வரம் துரோணீபுரேச்வரம் (சீயாழி) குடஜேசம். திரியம்பகேசம். ஸாரங்கேசம். வயாக்கிஸம் (பெரும்புலியூர்) வேதபுரீச்வரம். (திருவேதிகுடி & திருவழுந்தூர்) வியாஸேசம். பிக்ஷாடனேச்வரம். காளீவனேசம். விச்வாமித்திரேசம் காச்யபேசம். ச்வேதவனம். (திருவெண்காடு) ஸங்கமேசம். (காவேரிப்பட்டணம்) அகோரேசம். ஞானேச்வரம்.

இவைகள் காவேரிதீரத்தில் இருக்கின்றன. ஸஹ்யமலைக்கும் ஸமுத்திரத்திற்கும் இடையே காவேரிக்கு நூறுமுகங்கள் இருக்கின்றன. அதன் கரைகளில் "ஸ்வயம்புவம், தைவம், ஆர்ஷம்" என மூவகைப்பட்ட ஸ்தலங்கள் ஆறுயிரங்கள் இருக்கின்றன. அவைகளுள் அஞ்ஞானத்தைப் போக்குவன ஐநூறு. அவற்றுள் முக்தியளிக்கவல்லவைகளைக்கேள்.

ஆபதுத்தாரணேச்வரம், ஆநந்தீச்வரம், ஐராவதேச்வரம், பாணேச்வரம், நடராஜேச்வரம், ஸ்கந்தேச்வரம், விஷ்ணுநாதேச்வரம், பிரும்மதக்தபுரேச்வரம், கல்யாணேச்வரம், காமபூர்ணேசம், தக்ஷிணகோகர்ணம், தக்ஷிணாமூர்த்திலிங்கேசம், பிரணவேசம், (பெண்பெருந்துறை) சம்பகேசம், பாண்டவேசம், அர்க்கேசம், வம்சநாதேசம், அதன் தெற்கே பிப்பலேசம், ஹரதீர்த்தேசம், சாந்தநாதேசம்.

அதன் தெற்கே சுவேதநதி ஓடுகிறது. அஃது சுவேதலிங்கத்தினின்றும் பெறுகிற்று. சுவேதாசலத்தில் பதினெட்டு தீர்த்தங்கள் இருக்கின்றன.

சுவேதநதிக்கரையில் பில்வநாதேசம், கபித்தேசம், தந்த கட்டேச்வரம், கோமுகேசம், சிகாகிரிமஹேசம், குசாச்லேஷேகம் ருதுவனேசம், பர்த்ருபிரதேசம், சோரநாதேசம், பக்தாசலேச்வரம் இஃது என்னுடைய ஓர் வைஷ்ணவஸ்தானம். இதில் என்னை விஷ்ணு ஆராதித்தார். முன்பு காலனேமியை வதஞ் செய்த விஷ்ணுவிற்குச் சிரமபரிஹாரஞ் செய்துகொள்வதன் பொருட்டு நான் இந்த க்ஷேத்திரத்தைப் படைத்தேன். அந்த க்ஷேத்திரத்தைப் பாதுகாத்துவருகிறவரும், அசுரனைக்கொன்று களையுடன் வந்தவருமான விஷ்ணுவுக்கு ஆறிலொருபங்கு அன்னம் அளித்தேன்.

நாரதேசம், கஞ்சுகேசம், சூலேச்வரம், கட்கேசம், தாத்ரீச்வரம், டோலகாதேச்வரம், வல்லீபுரேசம், ஸ்கந்ததேஜஸ்தலம், அக்ஷப்பவடதீர்த்தம், ஸங்கமேசஸ்தலம், அம்போநிசம், கல்யாண ஸௌகந்திகம் கர்ப்பூரேசம், சந்திரபிம்பேசம், சத்யகிரீசம்.

இவ்வாலயங்களில் என்னை ஆராதிப்பவர்கள் நிச்சயமாய் முக்திபெறுவர்.

இவ்வாறு பவிஷ்யத்புராணத்திற் கூறப்பட்ட பிருஹதீசுவர மான்மியம் என்னுஞ் சோழமன்னர்களின் சரித்திரம் முற்றுப் பெற்றது. சுபம். சுபம். சுபம்.

என். வைத்திநாதசாஸ்திரி,
ஸாஹித்யசிரோமணி,
ஸரஸ்வதிமஹால் தஞ்சாவூர்.

---

## கூகலூர் வர்ணாசிரமதர்மஸபா
## சாரதாவிவாஹவயதுமசோதா கண்டனக்கூட்டம்.

ஷை கண்டனக்கூட்டம் 26—10—29-ல் மாலை 4-மணிக்கு பிர்ம்மஸ்ரீ ராமசேஷகனபாடிகள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. பண்டித S. K. வெங்கிடசுப்பிரமண்யய்யர் அவர்களால் ஷை சட்டத்தினுல் சீர்திருத்தக்காரர்களால் சொல்லும் காரணங்கள் கொஞ்சமேனும் இந்த சட்டத்திற்கு சம்பந்தம் இல்லையென்றும், நம் பிராமணசமூகம் காங்கிரசை விட்டு விலகி மதத்திற்காக

பாடுபடவேண்டுமென்றும், நம் தேசத்தில்மைனாரிடியாயுள்ள பிராமணர்கள் மதவிஷயத்தில் சில கோடாரிக்காம்புகள் தீர்மானமே தேசத்திற்கு அனுகூலமென்று கவர்மெண்டார் பாஸ்செய்தது வெறுக்கத்தக்கது என்றும், பிராமணர்கள் எல்லாரும் ஷை சட்டத்தை மீறி சாத்வீகசட்டமறுப்பு செய்து மதத்தை ஸம்ரக்ஷணம் செய்யவேண்டும் என்றும் பல மேற்கோள்களுடன் மூன்று மணி நேரம் பேசினார் ஷை சபைக்கு ஸ்திரீகளும் புமான்களும் சுமார் நூறுபேருக்குமேல் கூடியிருந்தார்கள். சபை இனிது நடைபெற்றது.

## சபையின் தீர்மானத்தின் விஷயம்.

1. விவாஹவயதுமசோதா விஷயமாய் சாத்வீக சட்டமறுப்பு செய்து உசிதகாலத்தில் விவாஹம் செய்யவேண்டும்.

2. பிராஹ்மணர்கள் ஒவ்வொருவரும் காங்கிரசைவிட்டு விலகி மதத்திற்காக உழைக்கவேண்டும்.

3. வரப்போகும் தேர்தலில் பிராஹ்மணர்கள் கலந்து கொள்ளாமல் இருக்கவேண்டியது.

4. மதராஸில் நடக்கப்போகும் ஸநாதன தர்மமஹாஸபைக்கு நான்கு பிரதிநிதிகள் போகவேண்டுமென்றும் ஏகமனதாய் தீர்மானம் ஆயிற்று.

ராமசேஷகனபாடிகள்,
கூகலூர்.

---

## அகில இந்திய ஸநாதன தர்ம மஹாஸபை.

சாரதா சட்டத்தை ஒழிக்கத்தக்க முயற்சி செய்வதின்பொருட்டு நவம்பர் 30உ, டிஸம்பர் 1, 2, இத்தேதிகளில் சென்னை ஒத்தவாடைத் தெரு 'வால்டாக்ஸ்' நாடகசாலையில் வங்க தேசாபிமானி ஸ்ரீமான் 'ஸ்யாமசுந்தர சக்கிரவர்த்தி' தலைமையின் கீழ் நடைபெறும். அங்காங்கு வைதிகசபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாவர்கள். பிரதிநிதிகளும் ப்ரேக்ஷகர்களும் கட்டணத்துடன் வர்ணாச்ரமத்தைப் பூர்ணமாக அங்கீகரிப்பதாய் கையெழுத்து இடப்பட்டு ப்ரவேசப் பத்திரத்துடன் விடப்படு

வார்கள். அவர்களுக்கு வேண்டிய இடவசதிகள் அவாவர்கள் ஆசாரப்படி இலவசமாய் எற்பாடு செய்யப்படும். அவாவர்கள் கொண்டுவரும் தீர்மானங்களை முன்னதாக காரியதரிசிக்குத் தெரிவித்து விடவேண்டும். 2. வெள்ளிக்கிழமை 29௳ காலை எழு மணிக்குத் தலைவர் ஸென்ட்ரல்ஸ்டேஷன் வந்திறங்குவார். மதிராஸ்த்திய பிராமணஸபை, அமாகலாவிலாஸினி ஸபை முதலியவர்களின் ஸம்ஸ்கிருத ஸ்வாகதப் பத்திரிகைப் படிக்கப்படும். ஆலய ப்ரஸாதங்கள் அளிக்கப்படும். அங்கிருந்து ஒற்றவாடை, சைனு பஜார், கோவிந்தப்பநாயகன் தெருக்கள் வழியாக ஊர்வலமாக தலைவர் விடுதிக்கு அழைத்துக்கொண்டு வரப்படுவர். அன்று மாலை 5-மணிக்கு கொங்குகொண்டான் மண்டபத்தில் ஆஸ்திகசிரோமணி திவான்பஹதூர் டி. ஆர். ராமச்சந்திர அய்யர் அவர்களால் ஹனுமத்வஜம் பறக்கவிடப்படும். சனிக்கிழமையில் மஹாநாட்டு மண்டபத்தில் ஸ்ரீமான் மார்க்கண்டேய சர்மா, ஸோமதேவசர்மா முதலியவர்களால் ஓர் சண்டியாகம் செய்யப்படும் அன்று மாலை 2-மணிக்கு மஹாசபைக் கூடும். வாவேற்புக் கமிட்டித் தலைவர் ஸபைத்தலைவர், உபன்யாஸத்திற்குப் பிறகு அனுதாபத் தந்திகள், படிக்கப்பட்டு விஷயாலோசனைக் கமிட்டிக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அன்று இரவு 9-மணிக்குத் தலைவர் விடுதியில் விஷயாலோசனைக் கமிட்டிக்கூடும். ஞாயிற்றுக்கிழமை 1௳ டிசம்பர் காலை 8-மணி முதல் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். அன்று மாலை 3-மணிக்குப் பெண்மக்கள் மஹாஸபை கூடும். அதேசமயத்தில் பண்டித பரிஷத் திருவல்லிக்கேணி கொங்குகொண்டான்மண்டபத்தில் கூடும். பலர் உபன்யசிப்பார்கள். இரவு 9-மணிக்குத் தலைவர் விடுதியில் ஆலோசனைக் கமிட்டிக் கூடும். திங்கள் மாலை காலைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்த ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்காரவர்கள் வந்தனோபசாரம் கூறுவர். பங்காளத் தலைவர் சக்கிரவர்த்தி நரேந்திரநாத் சேட், மித்ரா, முதலிய ப்ரபல தலைவர்கள் தென்னாட்டில் பற்பல விடங்களில் ப்ரஸங்கம் செய்வார்கள்.

ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவசர்மா,

உபகாரியதரிசி.

# மலர்கள்.

## முகவுரை.

இறைவனின் வழிபாட்டிற்கு மலர்கள் இன்றியமையாத தோர் துணைக்கருவியாகவிருக்கின்றன. உலகமெங்கும் பாவி நிற்கும் நிற்குணமான பரம்பொருளையணுகுவதும், அதனை வழிபடுவதும், நம்போன்றவர்களாலியலாதென்பதுபற்றிக் கருணைக் கடலாகிய கடவுள் நமக்கு அருள்புரிவதின்நிமித்தம் பல உருவங்களைப் பெற்றுள்ளார். அவரவர்களின் மனப்பான்மைக்கேற்ப நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வோருருவத்தை வழிபடுகிறோம். அவைகள் பல்லாயிரக்கணக்கானவைகளாகவிருப்பினும் ஆழ்ந்தாராயின் முக்கியமாக ஐந்துருக்களுள் அடங்குமென்பதனை நம் பரமாசார்யாள் நன்கெடுத்துக்காட்டியிருக்கின்றனர். அவ்வைந்தாவன—ஆதித்தன், அம்பிகை, விஷ்ணு, கணநாதர், மஹேசர் எனப்படுகின்றனர். எவ்வடிவமாக இருப்பினும் அஃது இவ்வைந்து மூர்த்திகளின் ¶ கலாமூர்த்தி, அம்சமூர்த்தி, கலாகலாமூர்த்தி, அம்சாம்சமூர்த்தி, கலாம்சமூர்த்தி, அம்சகலாமூர்த்தி என்னும் இப்பாகுபாட்டிற்கு உள்பட்டதாகவேயாகும்.

ஆஸ்திகர்களாகிய நம்முள் இறைவனின் ஓர் வடிவத்தையன்புடன் அர்ச்சிக்காதவரிரார் என்பது திண்ணம். அவ்வாறு அர்ச்சிப்பதற்குறிய பொருள்களை நாம் ஐவகைகளாகப்பிரித்தற்கூடும். அதாவது பரம், அபரம், உத்தமம், மத்திமம், அதமம் எனவாகும். "இவைகளுள் இரத்தினங்களாலும் தங்கத்தினாலும் மலைகள்போலுமிலைகள்போலுந் தயாரிக்கப்படுவதே பரம் எனப்படும். இஃது

---

¶ கலா=பதினாறில் ஓர் பங்கு
அம்சம்=நூற்றில் ஓர் பங்கு.

உதாரணமாக மஹேசகலாமூர்த்தி=பூர்ணகலாமூர்த்தியான மேஹேசரின் சக்தியிற்பதினாறில் சில பாகங்கள் அமைந்துள்ளது.

இவ்வாறே கலாமூர்த்தி $=\frac{1}{16}$ to $\frac{15}{16}$

அம்சமூர்த்தி $=\frac{1}{100}$ to $\frac{99}{100}$

கலாகலாமூர்த்தி $=\frac{1}{256}$ to $\frac{255}{256}$

அம்சாம்சமூர்த்தி $=\frac{1}{1000}$ to $\frac{999}{1000}$

கலாம்சமூர்த்தி }
அம்சாம்சமூர்த்தி } $=\frac{1}{1600}$ to $\frac{1559}{1600}$

ஓர்பொழுதும் நிர்மால்யமெனப்படுவதில்லை. பட்டுநூற்களால் அமைந்த பல வர்ணங்கள் பொருந்திய துணிகளாற் புட்பங்கள் போல் தயாரித்துவைத்துக்கொள்ளப்படுவதே அபரம். இஃது தினமும் சுத்தநீரினால் பிரோக்ஷணஞ் செய்யப்படுவதாலேயே சித்திபெறும். மரங்களிற் பூத்துக் காலையிற் கொய்துவரும் மலர்களே உத்தமம் எனப் பெயர்வாய்ந்தது. இவைகள் பிராதஸ்ஸந்தி, மாத்யான்ஹிகஸந்தி, ஸாயம்ஸந்தியெனப்படும் மூன்றுஸந்திகள் வரை நிர்மால்யமென்ற பெயர் பெறுவதில்லை. பழங்கள் மத்திமமெனப்படுகின்றன. இலைகள், தீர்த்தம் முதலியவைகள் அதமம் எனப்படுகின்றன. இவைகளை அப்போதைக்கப்போது தயாரித்துபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்." இவ்வாறு நாரதரால் கூறப்பட்டதாகப் பிரயோகபாரிஜாதத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

"1. உத்தமம்."

पुष्पैररण्यसंभूतैः पत्रैर्वा गिरिसम्भवैः ।
अपर्युषितनिश्छिद्रैः प्रोक्षितैर्जन्तुवर्जितैः ॥
आत्मारामोद्भवैर्वापि भक्त्या सम्पूजयेत्सुरान् । (भविष्यत्पुराणं)

அர்ச்சனைக்குறிய மலர்கள்.

முதல்நாளே கொய்யப்படாதவைகளும், துவாரங்களில்லாதவைகளும், பூச்சிகளுடனில்லாதவைகளும் சுத்தஜலந் தெளிக்கப்பற்றதுகளுமானதன தோட்டத்தில் பூத்த பூக்களாலாவது காடுகளில் மலர்ந்துள்ள மலர்களாலாவது மலைகளிலுள்ள மரங்களின் இலைகளாலாவது தேவர்களை யர்ச்சித்தல் பொருத்தமுடையது,

(தொடரும்) என். வைத்யநாதசாஸ்திரி

---

# ஓர் ஸந்தேகம்.

பத்னி அனுகூலமாயிருக்கும்பொழுது தகப்பனாரின் ஸபிண்டீகரணம் ஏற்பட்டால் எக்காரணத்தை முன்னிட்டாவது பத்னி இல்லாமல் ஸபிண்டீகரணம் செய்யலாமா? செய்வதாயிருந்தால் எப்படிச் செய்வது? தவறுதலாகச் செய்ததற்கு என்ன பிராயச்சித்தம்? இதுகளை மிகவும் கவனித்து பிரமாணவசனத்துடன் ஆர்யதர்மத்திலேயே பிரசுரிக்க வேண்டுகிறேன்.

T. V. கிருஷ்ணமூர்த்திசாஸ்திரிகள்,